# தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி - அறிவிப்புப் பலகை
# SPOC - ITW தேர்தல் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் – முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

DMK IT WING

திராவிட மாடல் 2.0 ஆட்சியை மீண்டும் அமைப்பதற்கான தேர்தல் பணிகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சட்டமன்ற தொகுதி வாரியாக SPOC (Single Point of Contact) - IT Wing தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் பின்வருமாறு.

| சட்டமன்ற தொகுதி | IT Wing ஒருங்கிணைப்பாளர் |
|---|---|
| 01.கும்மிடிப்பூண்டி | திரு.G.ரமேஷ் |
| 02.பொன்னேரி | திரு.சந்தோஷ் பிரபா |
| 03.திருத்தணி | திரு.R.குமரன் |
| 04.திருவள்ளூர் | திருமதி.விக்னேஷ்வரி |
| 05.பூந்தமல்லி | திரு.சுரேந்தர் |
| 06.ஆவடி | திரு.பிரவீன்குமார் |
| 07.மதுரவாயல் | திரு.T.பாலாஜி |
| 08.அம்பத்தூர் | திருமதி.சங்கரி தனசேகரன் |
| 09.மாதவரம் | திரு.சுரேந்தர் |
| 10.திருவொற்றியூர் | திரு.ராஜேஷ் |
| 11.ஆர்.கே.நகர் | திரு.வெங்கடேஷ் |
| 12.பெரம்பூர் | திரு. ஜி.பி.மோகன்பாபு |
| 13.கொளத்தூர் | திரு.அருண்குமார் மனோகரன் |
| 14.வில்லிவாக்கம் | திரு.பிரசன்ன வேலன் |
| 15.திரு.வி.க.நகர் | திரு.சிவக்குமார் |
| 16.எழும்பூர் | திரு.வெற்றிவேல் |
| 17.இராயபுரம் | திரு.மாரிமுத்து |
| 18.துறைமுகம் | திரு.பிரதீப் குமார் |
| 19.சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி | திரு.விஜய் சாரதி |
| 20.ஆயிரம் விளக்கு | திரு.சரவணன் |
| 21.அண்ணா நகர் | திரு.ஜெயக்குமரன் |
| 22.விருகம்பாக்கம் | திரு.சதீஷ் |
| 23.சைதாப்பேட்டை | திரு.மணிகண்டன் |
| 24.தியாகராயநகர் | திரு.பொன்னுதுரை |
| 25.மயிலாப்பூர் | திரு.கதிரவன் |
| 26.வேளச்சேரி | திரு.தியாகராஜன் |
| 27.சோழிங்கநல்லூர் | திரு.ஸ்டாலின் மொழி |
| 28.ஆலந்தூர் | திரு.ரவிச்சந்திரன் |
| 29.திருப்பெரும்புதூர் | திரு.M.குமார் |
| 30.பல்லாவரம் | திரு.A.தமிழ்மாறன் |
| 31.தாம்பரம் | திரு.சத்தியசீலன் |
| 32.செங்கல்பட்டு | திரு.G.ஸ்ரீனிவாசலு |
| 33.திருப்போரூர் | திரு.V.மனிஷ் குமார் |
| 34.செய்யூர் | திரு.C.தென்னக செல்வன் |
| 35.மதுராந்தகம் | திரு.S.M. ஜியாவுதீன் |
| 36.உத்திரமேரூர் | திரு.அண்ணாதுரை சுகுமார் |
| 37.காஞ்சிபுரம் | திரு.S.அரவிந்த் குமார் |
| 38.அரக்கோணம் | திரு.பிரகாஷ் |
| 39.சோளிங்கர் | திரு.ராம்கி |
| 40.காட்பாடி | திரு.ஏ.முத்து |
| 41.இராணிப்பேட்டை | திரு.டான்போஸ்கோ |
| 42.ஆற்காடு | திரு.ரவிக்குமார் |
| 43.வேலூர் | திரு.G.சுரேஷ் |
| 44.அணைக்கட்டு | திருமதி.பிரேமலதா |
| 45.கே.வி.குப்பம் | திரு.R.முரளி |
| 46.குடியாத்தம் | திரு.ஸ்ரீராம் |
| 47.வாணியம்பாடி | திரு.குணசேகரன் |
| 48.ஆம்பூர் | திரு.ஆனந்தன் |
| 49.ஜோலார்பேட்டை | திரு.அருள் நிதி |
| 50.திருப்பத்தூர் | திரு.சிவா |
| 51.ஊத்தங்கரை | திரு.பெருமாள் சாமி |
| 52.பர்கூர் | திரு.சத்தியபாரதி |
| 53.கிருஷ்ணகிரி | திரு.விஜய் ஆனந்த் |
| 54.வேப்பனஹள்ளி | திரு.ஜெயக்குமார் |
| 55.ஓசூர் | திரு.கலைவாணன் |
| 56.தளி | திரு.காலேஷா |
| 57.பாலக்கோடு | திருமதி.எஸ்.பரணி |
| 58.பென்னாகரம் | திரு.ஜெ.ராஜேஷ் |
| 59.தருமபுரி | திரு.உதயசூரியன் |
| 60.பாப்பிரெட்டிப்பட்டி | திரு.சண்முகம் |
| 61.அரூர் | திரு. தமிழழகன் |
| 62.செங்கம் | திரு. பிரவீன் குமார் |
| 63.திருவண்ணாமலை | திரு. கணேஷ் |
| 64.கீழ்பென்னாத்தூர் | திரு. மோகன் தாஸ் |
| 65.கலசப்பாக்கம் | திரு. நவீன் குமார் |
| 66.போளூர் | திரு. சரண்ராஜ் |
| 67.ஆரணி | திரு. புஷ்பராஜ் |
| 68.செய்யார் | திருமதி.தரணி முரளிதரன் |
| 69.வந்தவாசி | திரு. ஜி.செந்தில் குமார் |
| 70.செஞ்சி | திரு. S.மணிவண்ணன் |
| 71.மயிலம் | திரு. குருஜி |
| 72.திண்டிவனம் | திரு. S. சங்கர் |
| 73.வானூர் | திரு. A.புஷ்பராஜ் |
| 74.விழுப்புரம் | திரு. அன்பரசு |
| 75.விக்கிரவாண்டி | திரு. A.கதிரவன் |
| 76.திருக்கோவிலூர் | திரு. கிருஷ்ணராஜ் |
| 77.உளுந்தூர்பேட்டை | திரு. நீதிபதி |
| 78.ரிஷிவந்தியம் | திரு. கார்த்திகேயன் |
| 79.சங்கராபுரம் | திரு. திலீபன் |
| 80.கள்ளக்குறிச்சி | திரு. பிரகாஷ் |
| 81.கெங்கவல்லி | திரு. ராஜபாண்டியன் |
| 82.ஆத்தூர் | திரு. அருண் |
| 83.ஏற்காடு | திருமதி.பாக்கியலட்சுமி |
| 84.ஓமலூர் | திரு. ஜெயக்குமார் |
| 85.மேட்டூர் | திரு. வி.எம். சந்திரசேகரன் |
| 86.எடப்பாடி | திரு. திருநாவுக்கரசு |
| 87.சங்ககிரி | திரு. V.பூபதி |
| 88.சேலம் மேற்கு | டாக்டர்.A.K.தருண் |
| 89.சேலம் வடக்கு | திரு. ரவி ராஜு |
| 90.சேலம் தெற்கு | திருமதி.ரம்யா |
| 91.வீரபாண்டி | திரு. ஆனந்தராஜ் |
| 92.ராசிபுரம் | திரு. காந்தி |
| 93.சேந்தமங்கலம் | திரு. பூபதி |
| 94.நாமக்கல் | திரு. மகேஷ் |
| 95.பரமத்தி வேலூர் | திரு. எம்.சுரேஷ் குமார் |
| 96.திருச்செங்கோடு | திரு. கார்த்திக் |
| 97.குமாரபாளையம் | திரு. வடிவேல் |
| 98.ஈரோடு கிழக்கு | திரு. சந்தோஷ் |
| 99.ஈரோடு மேற்கு | திரு. கே. பார்த்திபன் |
| 100.மொடக்குறிச்சி | திருமதி.ஹேமலதா சம்பத் |
| 101.தாராபுரம் | திரு. அன்பழகன் |
| 102.காங்கேயம் | திரு. செந்தில் |
| 103.பெருந்துறை | திரு. மகேந்திரன் |
| 104.பவானி | திரு. ஜெகநாதன் |
| 105.அந்தியூர் | திரு. ஜோதிலிங்கம் |
| 106.கோபிசெட்டிபாளையம் | திரு. செந்தில் குமார் |
| 107.பவானிசாகர் | திரு. பிரபு |
| 108.உதகமண்டலம் | திரு. மணிகண்டன் |
| 109.கூடலூர் | திரு. S. செந்தில் குமார் |
| 110.குன்னூர் | திரு. P.ஜெய விக்னேஸ்வரன் |
| 111.மேட்டுப்பாளையம் | திரு. M.குணசேகரன் |
| 112.அவினாசி | திரு. சங்கர் |
| 113.திருப்பூர் வடக்கு | திரு. அருண் |
| 114.திருப்பூர் தெற்கு | திரு. சூர்யா |
| 115.பல்லடம் | திரு. பரமேஸ்வரன் |
| 116.சூலூர் | திரு. ரமேஷ் பாலன் |
| 117.கவுண்டம்பாளையம் | திரு. ஹரிஷ் |
| 118.கோவை வடக்கு | திரு.ஆர்.கே.சுரேஷ் குமார் |
| 119.தொண்டாமுத்தூர் | திரு.D.கார்த்திக் |
| 120.கோவை தெற்கு | திரு. வினோத் குமார் |
| 121.சிங்காநல்லூர் | திரு. J.ஜேசுதாஸ் |
| 122.கிணத்துக்கடவு | திரு. துளசி ராம் |
| 123.பொள்ளாச்சி | திரு. S.ஷைஜூ |
| 124.வால்பாறை | திரு. நூருல் அமீன் |
| 125.உடுமலைப்பேட்டை | திரு. நவீன் குமார் |
| 126.மடத்துக்குளம் | திரு. அகிலன் |
| 127.பழனி | திரு. C.திலீப் குமார் |
| 128.ஒட்டன்சத்திரம் | திரு. L.தினேஷ்குமார் |
| 129.ஆத்தூர் | திரு. S.கணேசன் |
| 130.நிலக்கோட்டை | திரு. K. முத்துப்பாண்டி |
| 131.நத்தம் | திரு. ஜாபர் அலி |
| 132.திண்டுக்கல் | திரு. கணேஷ் |
| 133.வேடசந்தூர் | திரு. A. பிரதீப் |
| 134.அரவக்குறிச்சி | திரு. கே.குமரன் |
| 135.கரூர் | திரு. எஸ்.தீபக் |
| 136.கிருஷ்ணராயபுரம் | திரு. பி.திலீபன் |
| 137.குளித்தலை | திரு. ஆர்.பிரவீன் |
| 138.மணப்பாறை | திரு. N.முரளிகிருஷ்ணன் |
| 139.ஸ்ரீரங்கம் | திரு. N. சக்திவேல் |
| 140.திருச்சி மேற்கு | திரு. A.கோவிந்தசாமி |
| 141.திருச்சி கிழக்கு | திரு. R. மகாதேவன் |
| 142.திருவெறும்பூர் | திரு. முத்தமிழ் கருணாநிதி |
| 143.லால்குடி | திரு. V. வினோத் குமார் |
| 144.மண்ணச்சநல்லூர் | திரு. சரவணராஜா |
| 145.முசிறி | திரு. A. சண்முகராஜ் |
| 146.துறையூர் | திரு. P. சேகர் |
| 147.பெரம்பலூர் | திருமதி.சுதா |
| 148.குன்னம் | திரு. R. ரமேஷ் |
| 149.அரியலூர் | திரு. ராஜ்குமார் |
| 150.ஜெயங்கொண்டம் | திரு. M. குலோத்துங்கன் |
| 151.திட்டக்குடி | திரு. A.ஆகாஷ் ராஜ் |
| 152.விருத்தாசலம் | திரு. V. அசோக்குமார் |
| 153.நெய்வேலி | திரு. P. சுரேஷ் |
| 154.பண்ருட்டி | திரு. D. நாராயணன் |
| 155.கடலூர் | திரு. P. பிரவீன்குமார் |
| 156.குறிஞ்சிப்பாடி | திரு. விஜய சந்திரன் |
| 157.புவனகிரி | திரு. சண்முகம் |
| 158.சிதம்பரம் | திரு. ஜாபர் அலி |
| 159.காட்டுமன்னார் கோவில் | திரு. M. வெற்றிசெல்வன் |
| 160.சீர்காழி | திரு. N. குழலரசன் |
| 161.மயிலாடுதுறை | திரு. கதிர்ராதா கிருஷ்ணன் |
| 162.பூம்புகார் | திரு. KS.மணிகண்டன் |
| 163.நாகப்பட்டினம் | திரு. ராபர்ட்கிங் |
| 164.கீழ்வேளூர் | திரு. A. செந்தில்நாதன் |
| 165.வேதாரண்யம் | திருமதி.காந்திமதி லோகநாதன் |
| 166.திருத்துறைப்பூண்டி | திரு. R.K. உதயசூரியன் |
| 167.மன்னார்குடி | திரு. AG இந்திரஜித் |
| 168.திருவாரூர் | திரு. B. அரவிந்த் |
| 169.நன்னிலம் | திரு. சைமன்ராஜ் |
| 170.திருவிடைமருதூர் | திரு. உதயகுமார் |
| 171.கும்பகோணம் | திரு. காளிதாஸ் |
| 172.பாபநாசம் | திரு. K. அருண்குமார் |
| 173.திருவையாறு | திரு. முத்து கதிர்வேலன் |
| 174.தஞ்சாவூர் | திருமதி.V.K. மோகனாம்பாள் |
| 175.ஒரத்தநாடு | திரு. K. மோகனரங்கன் |
| 176.பட்டுக்கோட்டை | திரு. காளிதாஸ் பாரதி |
| 177.பேராவூரணி | திரு. T. கற்பகமூர்த்தி |
| 178.கந்தர்வகோட்டை | திரு. P. சிங்கமுத்து |
| 179.விராலிமலை | திரு. S.தமிழினியன் |
| 180.புதுக்கோட்டை | திரு. முரளிதரன் |
| 181.திருமயம் | திரு. A. விஸ்வநாதன் |
| 182.ஆலங்குடி | திரு. வீரசெல்வம் |
| 183.அறந்தாங்கி | திரு. H. விமலாதிராஜன் |
| 184.காரைக்குடி | திரு. M. சசிவர்ணன் |
| 185.திருப்பத்தூர் | திரு. M.காளிமுத்து |
| 186.சிவகங்கை | திரு.சிவா |
| 187.மானாமதுரை | திரு. S.R. வினோத் |
| 188.மேலூர் | திரு. சந்தோஷ் |
| 189.மதுரை கிழக்கு | திரு. A.P.R.அண்ணாமலை |
| 190.சோழவந்தான் | திரு. சதீஷ் |
| 191.மதுரை வடக்கு | திரு. பால கிருஷ்ணன் |
| 192.மதுரை தெற்கு | திரு.A.M.M.முத்துராமலிங்கம் |
| 193.மதுரை மத்தியம் | திரு. P.ஜெயப்பிரகாஷ் |
| 194.மதுரை மேற்கு | திரு. N.சுந்தரேசன் |
| 195.திருப்பரங்குன்றம் | திரு. சுந்தர பாண்டியன் |
| 196.திருமங்கலம் | திரு. ஜெயச்சந்திரன் |
| 197.உசிலம்பட்டி | திரு. M. தினேஷ்குமார் |
| 198.ஆண்டிபட்டி | திரு. J.A.அதிபன்ராஜ் |
| 199.பெரியகுளம் | திரு. K ராஜேஷ்குமார் |
| 200.போடிநாயக்கனூர் | செல்வி.R.ரமணி |
| 201.கம்பம் | திரு. A.திலிப் ராஜ்குமார் |
| 202.ராஜபாளையம் | திரு. J. ஹரிஷ் |
| 203.ஸ்ரீவில்லிபுத்தூர் | திரு. S. சுந்தர் ஸ்டாலின் |
| 204.சாத்தூர் | திரு. R. வேலுச்சாமி |
| 205.சிவகாசி | திருமதி.M. ஜெஸ்வந்தி டேவிட் |
| 206.விருதுநகர் | திரு. B. தங்கதுரை |
| 207.அருப்புக்கோட்டை | திரு. J. கேத்தாரி சங்கர் |
| 208.திருச்சுழி | திரு. R. சிலம்பரசன் |
| 209.பரமக்குடி | திரு. E. ஜோசப் குழந்தை ராஜா |
| 210.திருவாடனை | திரு. விஜய கதிரவன் |
| 211.ராமநாதபுரம் | திரு. U. அக்பர் அலி |
| 212.முதுகுளத்தூர் | திரு. ரஞ்சித் மணிகண்டன் |
| 213.விளாத்திக்குளம் | திரு. S. முனியசாமி @ ஸ்ரீதர் |
| 214.தூத்துக்குடி | திரு. அபிராமிநாதன் |
| 215.திருச்செந்தூர் | திரு. பேரின்பராஜ் லாசரஸ் |
| 216.ஸ்ரீவைகுண்டம் | திரு. வெங்கட் சிவா |
| 217.ஓட்டபிடாரம் | திரு. N. சின்னதுரை பாண்டியன் |
| 218.கோவில்பட்டி | திரு. பழனிக்குமார் |
| 219.சங்கரன்கோவில் | திரு. சிவசங்கர நாராயணன் |
| 220.வாசுதேவநல்லூர் | திரு. கிப்ட்சன் |
| 221.கடையநல்லூர் | திரு. C. சங்கர் அழகு தமிழ் |
| 222.தென்காசி | திரு. சண்முகமணிகண்டன் |
| 223.ஆலங்குளம் | திரு. ஆறுமுக செல்வன் |
| 224.திருநெல்வேலி | திரு. ஸ்ரீராம் |
| 225.அம்பாசமுத்திரம் | திரு. S. பிரேம் ஆனந்த் |
| 226.பாளையங்கோட்டை | திரு. A. காசிமணி |
| 227.நாங்குநேரி | திரு. அழகுமுத்து |
| 228.ராதாபுரம் | திரு. சரவணன் |
| 229.கன்னியாகுமரி | திருமதி.M. ஜெமிலா ஆண்டனி |
| 230.நாகர்கோவில் | திரு. தெய்வேந்திரன் |
| 231.குளச்சல் | திரு. வின்ஸ்டார் |
| 232.பத்மநாபபுரம் | திரு. ஜெய சிங் |
| 233.விளவங்கோடு | திருமதி.ஆஸ்பின் C. S. கிருபா |
| 234.கிள்ளியூர் | திரு. P.S.அபிலாஸ் |

### பொறுப்புகள்:

தேர்தல் தொடர்பான தகவல் தொழில்நுட்ப பணிகளை ஒருங்கிணைத்தல் - மாவட்டக் கழகத்துடன் இணைந்து செயல்படுதல் - War Room (Firewall) பணிகளை முன்னெடுத்தல் - சமூக வலைத்தளப் பிரச்சாரங்களை தீவிரப்படுத்துதல்

### அறிவுறுத்தல்:

அனைத்து SPOCகளும், மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் இணைந்து,அணி நிர்வாகிகளுடன் நேரடி ஆலோசனைகள் நடத்தி, தேர்தல் பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டும்.

### முக்கிய குறிப்பு:

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் IT Wing செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டும்.War Room அமைப்புகள் உடனடியாக செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை
நாள்- 24.03.2026

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!... 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

இன்று பா.ஜ.க ஒரு அணி, பா.ஜ.கவின் பிஅணி, சி அணி, டிஅணி என்று பல அணிகள் இன்று இறங்கியிருக்கின்றன. எத்தனை அணிகள் வந்தாலும் தி.மு.க. தான் சாம்பியன், நம் தலைவர்தான் சாம்பியன் என்கிறதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். முதலில் இளைஞர் அணி நிர்வாகிகள், உங்கள் அனைவருக்கும் ஒரு வேண்டுகோள். முதலில் உங்களின் வாக்கு, உங்களின் குடும்பத்தினரின் வாக்கு அதை முதலில் நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். உங்களின் பெற்றோர்கள், உங்களின் அண்ணன், தங்கை, தம்பிமார்கள், உங்களின் மனைவி அவர்களின் வாக்குகள் எதுவுமே சிந்தாமல் சிதறாமல் நம் தி.மு.கவுக்கு உதயசூரியன் சின்னத்துக்கு அதை நீங்கள் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

உங்களின் நண்பர்கள், நண்பர்களின் உற்றார் உறவினர்கள், தம்பி தங்கைகள் அவர்களிடமும் நம் பிரச்சாரத்தைக் கொண்டு சேர்க்க வேண்டும். கழக ஆட்சியில் செய்திருக்கக்கூடிய சாதனைகளை எடுத்துக் கொண்டு சேருங்கள். சில பேர் மாற்றுக் கட்சியினராக கூட இருக்கலாம், எதிர்க்கட்சியாக இருக்கலாம். நம் திட்டங்கள் தெரியாமல் நம் வரலாறு தெரியாமல் அவர்கள் எல்லாம் மாற்றுக் கட்சியில் சேர்ந்து இருக்கலாம். அவர்களையும் சந்தித்துப் பேசுங்கள். தி.மு.க தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு என்னென்ன செய்திருக்கிறது, மாநில உரிமைகளுக்கு நாம் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.

இன்று கொள்கை என்றால் என்னவென்றே தெரியாமல் ஒரு கூட்டம் சுற்றிக்கொண்டிருக்கிறது அந்த கூட்டத்திடமும் பொறுமையாக உட்கார்ந்து பேசுங்கள். அவர்களையும் கொள்கைவயப்படுத்துகின்ற கடமை நமக்கு இருக்கிறது. நமக்கு எதிராகப் பரப்பப்படுகின்ற பொய் செய்திகளை, வதந்திகளை ஆதாரத்தோடு நீங்கள் களத்தில் இறங்கி முறியடியுங்கள்.

**புள்ளி விவரத்துடன் சொல்லுங்கள்!**

முக்கியமாக கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு எவற்றையெல்லாம் இழந்தது என்பதையும், கடந்த ஐந்து வருடத்தில் நம் முதலமைச்சர், நம் தி.மு.க ஆட்சியில் அதையெல்லாம் எப்படிச் சரி செய்தோம் என்பதைத் தரவுத் தளத்தோடு அவர்களை சந்தித்துப் பேசுங்கள். புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொல்லுங்கள்.

வட்ட, கிளை, பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் வாக்குச்சாவடியில் இருக்கிற ஒவ்வொரு வீட்டுக்கும் குறைந்தது இரண்டு முறையாவது நீங்கள் சென்று வாக்கு கேட்க வேண்டும். இளைஞர் அணியின் இலக்கு, ஒவ்வொரு வீட்டிலும் 18 வயதிலிருந்து 35 வயது வரைக்கும் இருக்கக்கூடிய அனைத்து வாக்காளர்களும் நம் இலக்கு என்று முடிவு செய்து நாம் வேலை செய்ய வேண்டும். நான் எப்படி உங்களையெல்லாம் பலமுறை சந்திக்கிறேனோ, பலதடவை சந்திக்கிறேனோ அதே மாதிரி நீங்களும் வட்ட மற்றும் வாக்குச்சாவடி அளவில் இருக்கிற இளைஞர் அணி நிர்வாகிகளை நீங்களும் சந்தித்து அவர்களை ஊக்குவியுங்கள்.

இளைஞர் அணி நிர்வாகிகள் நீங்கள் பலர் பி.எல்.ஏ.2, பி.எல்.சிகளாக இருக்கிறீர்கள். அந்தந்தப் பொறுப்பில் மிகவும் கவனமாக நம் செயல்பாடுகள் இருக்க வேண்டும். உங்கள் வாக்குச்சாவடியில் உங்கள் தொகுதியில் இளைஞர் அணி நிர்வாகிகளின் பணி தனியாகத் தெரிய வேண்டும். களத்தில் மட்டும் இல்லாமல் அந்தப் பணி தேர்தல் முடிவிலும் தனியாகத் தெரிய வேண்டும்.

நான் உங்களிடம் எல்லாம் கேட்டுக்கொள்வது மக்களுடன் நீங்கள் அனைவரும் நேரடித் தொடர்பில் இருங்கள். நீங்கள் நேரடித் தொடர்பில் மக்களுடன் இருந்தீர்கள் என்றால் நிச்சயம் அவர்கள் நம்பிக்கையை நீங்கள் பெற்றுவிடுவீர்கள். மக்களின் நம்பிக்கையை ஒரு முறை நீங்கள் பெற்றுவிட்டீர்கள் என்றால் அது உங்களின் எதிர்காலத்துக்கு மிகப்பெரிய ஒரு ஆதரவாக இருக்கும்.

பொதுவாழ்விற்கு என்று வந்துவிட்டோம் என்றால் மக்களின் நம்பிக்கைதான் மிக மிக முக்கியம். அதனால் மக்களிடம் பேசும்போது கவனமாகப் பேசுங்கள். இன்று எல்லார் கையிலும் அலைபேசி இருக்கிறது எல்லாவற்றை யும் எல்லாரும் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. நிர்வாகி அதுவும் குறிப்பாக இளைஞர் அணி நிர்வாகிகள் யாராவது தவறாகப் பேசிவிட மாட்டார்களா தவறான வார்த்தைகளைப் பயன்படுத்திவிட மாட்டார்களா அதைச் செய்தியாக்கி பெரிய விஷயம் ஆக்கிவிட மாட்டோமா என்று செய்தித் தொலைக்காட்சிகள் எல்லாம் காத்துக் கொண்டிருக்கின்றன. எனவே நம் ஒவ்வொரு வார்த்தையையும் பார்த்துப் பார்த்துப் பேச வேண்டும்.

**ஆரோக்கியமான போட்டி**

யாருடைய வாக்குச்சாவடியில் யார் அதிக வாக்கு வாங்கித் தரப்போகிறீர்கள் என்று உங்களுக்குள் ஓர் ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். நான் இந்தத் தெருவுக்குப் பொறுப்பு, நான் இந்த குடும்பங்களுக்கு நான் பொறுப்பு, இந்த 100 வாக்குகளுக்கு நான் பொறுப்பு என்று உங்களுக்குள் திட்டமிட்டு, உத்தியோடு, கவனமாகச் செய்தீர்கள் என்றால் நுண் அளவில் இறங்கிப் பணி செய்தோம் என்றால் நிச்சயம் வெற்றி உறுதி.

உதாரணமாக ஒரு வாக்குச்சாவடியில் 1,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்றால் அந்த 1,000 வாக்காளர்களையும் நாம் நிச்சயம் ஒரு முறையாவது நம் இளைஞர் அணி நிர்வாகிகள் சந்தித்திருக்க வேண்டும். அதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தப் பணிகளை எல்லாம் செய்யும்போது ஒன்றிய, நகர, மாவட்டச் செயலாளர்கள் அவர்களுடன் ஆலோசனை செய்து அவர்களின் வழிகாட்டலுடன் செய்யுங்கள். அவர்கள் உங்களைக் கண்டிப்பாக வழிநடத்துவார்கள். தேர்தலுக்கு இன்னும் 32 நாட்கள்தான் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் நீங்கள் எத்தனை பேரைச் சந்தித்தீர்கள் எந்தப் பகுதியில் வாக்கு சேகரித்தீர்கள் என்பதைக் குறிப்பேட்டில் குறித்து, தேதி போட்டுப் புகைப் படத்தோடு பதிவு செய்து வையுங்கள்.

நான் மீண்டும் பிரச்சாரத்திற்காக கரூருக்கும் திருப்பூருக்கும் நிச்சயம் வருவேன். அப்பொழுது வரும்போது நிச்சயமாக உங்களின் குறிப்பேட்டைப் பார்த்துச் சரிபார்ப்பேன். நீங்கள் ஒவ்வொருவரும் நான் இத்தனை வாக்குகளை நான் உறுதி செய்து வைத்திருக்கிறேன், இத்தனை வாக்குகளை நான் வந்து சேமித்து வைத்திருக்கிறேன், இத்தனை பேரை தி.மு.க ஆதரவாளர்களாக மாற்றி வைத்திருக்கிறேன் என்று நீங்கள் சந்தோஷமாகச் சொல்லும்போதுதான் எனக்கு உண்மையாகவே அன்று சந்தோஷம்.

நீங்கள் ஒவ்வொருவரும் செல்வாக்கு செலுத்துபவர்களாக மாற வேண்டும். நான் மீண்டும் உங்களுக்குச் சொல்கிறேன் யார் உண்மையாக உழைக்கிறீர்களோ நிச்சயம் அவர்களுக்கான வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். மறுபடியும் சொல்கிறேன், உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரத்துக்கு நான் பொறுப்பு. நான் மட்டும் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்காதீர்கள் நம் தலைவர் அவர்களும் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். தலைவர் உங்களை மட்டும் இல்லை என்னையும் சேர்த்து கவனித்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நாளும் என்னென்ன பணிகள் செய்து கொண்டிருக்கிறோம் என்று கவனித்துக் கொண்டிருக்கிறார். இது எனக்கு மட்டும் வைக்கப்பட்ட தேர்வு கிடையாது, உங்களுக்கும் சேர்த்து தான். நாம் இரண்டு பேரும் சேர்ந்துதான் அந்தத் தேர்வை எழுதப்போகிறோம்.

நிச்சயமாக தேர்ச்சி பெறுவோம். ஆனால் சாதாரணமாகத் தேர்ச்சி பெற்றால் நமக்கு அழகா? சிறப்புத் தேர்ச்சி பெற வேண்டும். தேர்ச்சி பெற்றுக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் இளைஞர் அணிக்குப் பெருமை. அதை நீங்கள் செய்வீர்கள் என்கின்ற என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தி.மு.க. காரன் என்றால் எல்லாரும், எதிர்க்கட்சிக்காரன் கூட என்ன தெரியுமா சொல்வான்? ‘தேர்தல் வேலை என்று வந்துவிட்டால் தி.மு.க. காரன் சிங்கிள் டீயைக் குடித்துவிட்டு அசராமல் வேலை பார்க்கிறான்ப்பா,’ என்று எதிர்க்கட்சிகள் சொல்வார்கள். அவர்களை நாம் பேச வைக்க வேண்டும். என்ன சொல்ல வைக்க வேண்டும்? ‘சிங்கிள் தகவல் தலைமையிடமிருந்து வந்தால் போதும், 234 தொகுதியிலும் இளைஞர் அணி தம்பிமார்கள் வாக்குச்சாவடி வரைக்கும் இறங்கி வேலை பார்த்தார்கள்’ என்று அவர்களைச் சொல்ல வைக்க வேண்டும்.தமிழ்நாடு என்றுமே தலைகுனியாது என்பதை நம் தலைவர் திரும்பத் திரும்பச் சொல்கிறார் என்றால், அதை நாம் களத்தில் செய்து காட்ட வேண்டும். தலைவர் சொல்கிறார், ‘தமிழ்நாடு என்றுமே டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் தான்.’ அதை பலமுறை தமிழ்நாட்டு மக்கள் நிரூபித்திருக்கிறார்கள். அதை மீண்டும் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

தலைவர் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார். ‘வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு’ என்று. ஆனால் நான் சொல்கிறேன், அடுத்த 32 நாட்கள் களத்தில் இறங்கிச் சரியாக வேலை செய்தோம் என்றால், பிரச்சாரத்தைச் சரியாக மேற்கொண்டோம் என்றால், 200 அல்ல, 234 தொகுதியிலும் நிச்சயம் தி.மு.க கூட்டணி வெற்றி பெறும்.

அந்த வெற்றியைத் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் இருந்து நாம் தொடங்க வேண்டும். கரூர் மாவட்டம் ஏற்கனவே 100 சதவிகித வெற்றி பெற்றிருக்கோம். இருந்தாலும் இந்த முறை மெத்தனமாக இருந்துவிடக்கூடாது, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சென்ற முறை வாங்கிய வாக்கு வித்தியாசத்தை விட அதிகமான வாக்கு வித்தியாசத்துக்கு நாம் இலக்கு வைக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய தாராபுரம், காங்கேயம், திருப்பூர் தெற்கு தொகுதிகளிலும், சென்ற முறை தவறவிட்ட பல்லடம், அவினாசி, திருப்பூர் வடக்கு, உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் தொகுதியை நாம் இந்த முறை தவறவிட்டுவிடக் கூடாது. மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நாம் ஆட்சி அமைக்கப் போவது உறுதி. தி.மு.க ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கப் போவது உறுதி. நம் தலைவர் உறுதியாக இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் அமரப் போவது உறுதி. அந்த வெற்றிக்கு இளைஞர் அணியின் பங்களிப்பு மிக மிக முக்கியம் என்று எல்லாரையும் பேச வைக்க வேண்டும். ‘இளைஞர் அணி தம்பிமார்கள் சிறப்பாக வேலை பார்த்தார்கள், தி.மு.க இளைஞர் அணிக்கு நிகராக ஆள் இல்லை’ என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டும். வெற்றி என்றால் அது சாதாரண வெற்றியாக இருக்கக்கூடாது. எல்லாரும் வியந்து பேசும் அளவிற்கு மிகப்பெரிய வெற்றியாக இருக்க வேண்டும். அடுத்த 32 நாட்களுக்குத் தேர்தல் மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். ஆகவே இதை மனதில் வைத்துக்கொண்டு உங்கள் பணிகளைச் செய்யுங்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம், தேர்தல் நெருங்க நெருங்க நிறையத் தேர்தல் கருத்துக்கணிப்பு எல்லாம் வரும். அதுவும் இந்தக் கருத்துக்கணிப்பு எல்லாம் பார்த்தீர்கள் என்றால், இப்பொழுது எல்லாக் கருத்துக்கணிப்பிலும் தி.மு.க தான் வெற்றி, தி.மு.க.தான் அடுத்த ஆட்சி அமைக்கப் போகிறது என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் தன்னம்பிக்கையோடு இருக்கலாம், ஆனால் அதிகப்படியான தன்னம்பிக்கையில் இருக்கக்கூடாது. கருத்துக்கணிப்பில் என்ன சொல்கிறார்களோ அதை இரண்டு மடங்காக மாற்றிக் காட்ட வேண்டும். அதுதான் தி.மு.க. இளைஞர் அணியின் வெற்றி. நம்மை அழித்துவிடுவோம், நம்மை ஒழித்துவிடுவோம் என்று இன்று புதிது புதிதாகக் கிளம்பி வருவார்கள். ஏற்கனவே இருப்பவர்கள் எல்லாம் சொல்வார்கள். அவர்களைப் பற்றி எல்லாம் நாம் கவலைப்பட வேண்டாம்.

அவர்களுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா 1940 களில் சொல்லிவிட்டார். என்ன தெரியுமா சொல்லியிருக்கிறார்? ‘தி.மு.கவை அழிக்க வேண்டும் என்று பல பேர் கிளம்பி வருவார்கள். தி.மு.கவை அழிக்க வேண்டும் என்று நான்கு அடிக்குக் குழி வெட்டுவார்கள். அவர்கள் குழி வெட்டிக்கொண்டிருக்கும் போதே தி.மு.க ஆறு அடிக்கு வளர்ந்துவிடும். உடனே அவர்கள் ஆறு அடிக்குக் குழி வெட்ட இறங்குவார்கள், அதற்குள் தி.மு.க 12 அடிக்கு வளர்ந்துவிடும். நீங்கள் வெட்ட வெட்ட நாங்கள் வளர்ந்துகொண்டே இருப்போம். உங்களால் எந்த நாளிலும் தி.மு.கவை நெருங்க முடியாது, வீழ்த்த முடியாது’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றே சொல்லிவிட்டார்.

எனவே, அதை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு தேர்தல் பணிகளில் நாம் ஈடுபடுவோம் என்று கூறிக் கொண்டு, மீண்டும் பிரச்சாரத்தின்போது வருவேன், உங்கள் மாவட்டத்திற்கே வந்து உங்களையெல்லாம் மீண்டும் நான் சந்திப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, இந்த ஆலோசனைக் கூட்டத்தை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய மாவட்ட கழக நிர்வாகத்துக்கும், வந்திருக்கக்கூடிய அனைத்து நிர்வாகிகளுக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, ‘வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு’ என்று கூறிக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், சக்கரபாணி, மண்டல பொறுப்பாளர் செந்தில் பாலாஜி, மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வராஜ், இல.பத்மநாபன், மாநகர மேயர் தினேஷ், நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி, இளைஞர் அணியின் மாநிலத் துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் இளங்கோவன், சிவகாமசுந்தரி, மாநகரச் செயலாளர்கள் கனகராஜ், தங்கராஜ், நெசவாளர் அணியின் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், செயலாளர் பரணி மணி, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மணிராஜ், முனைவர் ஜான், கேசவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தினகரன், அம்பால் நந்தகுமார், பொள்ளாச்சி சித்திக், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாநகர மேயர் கவிதா கணேசன், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் சீனிவாசன், ஆனந்தகுமார், திருப்பூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயக்குமார், கரூர் மாவட்ட அமைப்பாளர் சக்திவேல், மாநகர அமைப்பாளர் கராத்தே பூபதி, எம்.எஸ்.ஆர்.ராஜ் என்கிற மணிகண்ட பிரபு, முத்துக்குமார் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.